கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
வடக்கு மாகாண சபை.
2019.05.27.

சுற்றறிக்கை 2019/01

சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர்களுக்கும்,

## பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் வினைத்திறன் குன்றிய கிளை நிலையங்களை பயன்பாட்டுக்குட்படுத்தல்

வடக்கு மாகாணத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பல கிளை நிலையங்கள் மூடப்பட்ட நிலையில் உள்ளன. பல கிளை நிலையங்கள் தொடர்ந்தும் இயங்கமுடியாத நிலையில் / நட்டத்தில் இயங்குகின்றன. கிளை நிலையங்கள் தமது செயற்பாட்டினை சீராக கொண்டு செல்வதற்கு அதன் உரிமையாளர்களான கிளைக்குழுக்களே பொறுப்பாய் இருந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் இவ்வாறான கிளை நிலையங்களை கிளைக்குழுக்களின் ஆதரவுடன், முழு வலுவுடன் மீளவும் இயங்கச் செய்வதற்கான/பயன்பாட்டிற்கு விடுவதற்கான பொருத்தமான திட்டமொன்றின் அவசியப்பாடு உணரப்படுகின்றது. இதற்காக தயாரிக்கப்பட்ட நான்கு வழிமுறைகளைக் கொண்ட திட்டவரைபு பின்வருமாறு.

01. கிளைக்குழு அங்கத்தவர்கள் கிளை நிலையத்தை நடாத்துதல் :

கிளை அங்கத்தவர்களது சுய முதலீடுகள் மூலம் கிளையை இயக்கும் வழிமுறை இதுவாகும். முதலீட்டின் அளவு பங்குப் பெறுமதியின் அடிப்படையில் பங்குப்பொதியாக தீர்மானிக்கப்படலாம். கிளைக்குழு குறித்த கிளைநிலையத்தை நடாத்துவதற்கு தேவையான முதலீட்டுத் தொகையைத் தீர்மானித்து, ஒவ்வொரு கிளை அங்கத்தவரும் ஆகக் குறைந்த ஒருபங்குப் பொதியிலேனும் முதலிட வேண்டும் என்னும் அக்கறையை ஏற்படுத்தல் வேண்டும்.

கிளைநிலைய முகாமைத்துவம் தொடர்பான விபரங்கள் வருமாறு.

i. <u>நிலைய மேற்பார்வையும் கணக்குவைப்பும்</u> -கிளைக்குழு நியமிக்கும் அங்கத்தவரொருவர் ஊடாக மேற்பார்வை செய்யலாம். அத்துடன் கிளைநிலைய முகாமையாளரே கணக்குவைப்புக்களை பேணவேண்டும்.

ii. <u>பொருட்கொள்வனவு</u> - விற்பனைக்கான அத்தியாவசிய பொருட்களை தலைமைச் சங்கத்தின் மொத்தநிலைய விற்கும் விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

iii. <u>கணக்குப் பரிசீலனை</u> – தலைமை அலுவலக உள்ளக கணக்காய்வாளர்/கணக்காளர்/ கணக்குப்பதிவாளர் கிளைக்குழுவின் குறித்த கணக்கைக் காலாந்தரமாகப் பரிசீலித்து வழங்க வேண்டும்.

iv. <u>பணித்தொகுதி</u> - சங்கத்தின் பதவிநிர்ணயம் பெற்ற பணியாளர்கள் இருப்பின் அவர்களைப் பயன்படுத்தலாம். அவ்வாறான பணியாளர்கள் இல்லாதவிடத்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அனுமதியுடன் கிளைக்குழு தற்காலிகமாக பணித்தொகுதியை நியமித்துக் கொள்ளலாம். பணியாளர்களின் சம்பளங்கள் பொருத்தமான முறையில் கிளைக்குழுக்களால் வழங்கப்பட வேண்டும்.

v. <u>பணியாளர் சம்பளம்</u> – தலைமைச் சங்கத்தின் பணித்தொகுதி பயன்படுத்தப்படின் அவ் பணியாளர்களுக்குரிய சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும் (ஊ.சே.நிதி, ஊ.ந.நிதி, பணிக்கொடை, வாழ்கைச்செலவுப்படி) என்பவற்றை தலைமைச் சங்கத்துக்கு வழங்க வேண்டும்.

vi. <u>இலாப ஒதுக்கீடு</u> – கிளையின் மாதாந்த தேறிய இலாபத்தில் 1/5 பங்கு கிளை நிலைய இலாப ஒதுக்கமாக தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்தல் வேண்டும் .

vii. <u>இலாப பகிர்வு</u> – கிளை அங்கத்தவர்களது பங்குகளின் பெறுமதியின் அடிப்படையில் ஆகக் கூடியது காலாண்டுக்கொரு தடவையேனும், கணக்குகளைப் பரிசீலித்து தலைமை அலுவலகத்தால் உறுதிப்படுத்திய பின் பங்கிலாபமாகப் பகிர்ந்தளிக்கலாம்.

viii. <u>கண்காணிப்புக் கூட்டம்</u> - கிளைக்குழு மாதாந்தம் குறைந்தது ஒரு கிளைக்குழுக் கூட்டத்தையாவது நடாத்தி கிளையின் செயற்பாடு தொடர்பாக கண்காணித்தல் வேண்டும்.

02. இயங்காதுள்ள கிளை நிலையங்களை அல்லது நட்டத்தில் இயங்குகின்ற கிளை நிலையங்களை அதே பிரதேச அங்கத்தவருக்கு வழங்கல் :

சங்க கிளை நிலையம் நடாத்துவதற்கு விரும்பும் அங்கத்தவர்களுக்கு உள்ளக பகிரங்க கேள்வி கோரலின் அடிப்படையில் வருடமொன்றுக்கு வழங்குதலே இவ்வழிமுறையாகும். கிளை நிலையத்தின் வியாபார எதிர்வு கூறல்களின் அடிப்படையில் கிளை அங்கத்தவர் தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோர் இணைந்தோ நடாத்துவது தொடர்பான தீர்மானத்தை கேள்வி கோரலின் முன்னர் கிளைப் பொதுச்சபை எடுத்தல் வேண்டும். கிளை நிலையத்தை நடாத்துபவர் அத்தியாவசிய பொருட்கொள்வனவை மாத்திரம் தலைமைச் சங்கத்தின் மொத்த நிலைய விற்கும் விலையில் பெற்றுக்கொள்ள வேண்டும். தேவைப்படுமாயின் பொருத்தமான பணித்தொகுதியை நியமிப்பது, மற்றும் சம்பளங்கள் வழங்குவது என்பன கிளை நிலையத்தை நடாத்தும் குறித்த அங்கத்தவரை / அங்கத்தவர்களைச் சார்ந்ததாகும். கிளைப் பொதுச்சபை தீர்மானிக்கும் தேறிய இலாப வீதத்தை குறித்த கிளை நிலைய அபிவிருத்தி ஒதுக்கமாக தலைமை அலுவலகத்தில் வைப்பிலிட வேண்டும்.

03. கிளை நிலையத்தை அதே தேவைப்பாட்டுக்கு பகிரங்க கேள்வி கோரலின் ஊடாக இரு ஆண்டுகளுக்கு முற்றாக தனியாருக்கு வாடகைக்கு வழங்குதல்:

இயங்காதுள்ள கிளை நிலையத்தை பகிரங்க கேள்வி கோரலின் ஊடாக உரிய உடன்படிக்கையொன்றைச் செய்து இரு ஆண்டுகளுக்கு முற்றாக தனியாருக்கு கிளைப் பொதுச்சபை தீர்மானிக்கும் மாதாந்த வாடகைக்கு வழங்கலாம். கிடைக்கப்பெறும் மாதாந்த வாடகைத் தொகை கிளை நிலைய அபிவிருத்தி ஒதுக்கமாக வைப்பிலிடப்பட வேண்டும். கிளைநிலைய வாடகை முற்பணங்கள் தேவைப்படுமாயின் தீர்மானிக்கும் பொறுப்பு கிளைப்பொதுச்சபையுடையதாகும்.

04. வேறு தேவைகளுக்கு பகிரங்க கேள்வி கோரலின் ஊடாக ஏனையோருக்கு வாடகைக்கு வழங்கல்:

பயன்பாடின்றி இருக்கும் கிளை கட்டிடத்தை பகிரங்க கேள்வி கோரலின் ஊடாக அப்பிரதேசத்திலுள்ள அரசநிறுவனங்களுக்கோ /ஏனையோருக்கோ உரிய உடன்படிக்கை யொன்றைச் செய்து கிளைப்பொதுச் சபை தீர்மானிக்கும் மாதாந்த வாடகைக்கு வழங்கலாம். கிடைக்கப்பெறும் மாதாந்த வாடகைத் தொகை கிளை நிலைய அபிவிருத்தி ஒதுக்கமாக வைப்பிலிடப்படல் வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நான்கு வழிமுறை அதன் முன்னுரிமை வரிசைப்படி (1,2.,3,4) கலந்தாலோசித்து கிளைப் பொதுச்சபைத் தீர்மானத்துடன் சங்கத்தின் இயக்குனர் சபைக்கு சமர்ப்பித்து தீர்மானம் மேற்கொண்டு பொதுச்சபையில் இச் சுற்றறிக்கைக்கமைவாக, இயங்காதுள்ள கிளைநிலையங்களை இயங்கவைப்பதற்கான/தொடர்ந்து நட்டத்தில் இயங்கும் கிளைநிலையங்களை இலாபகரமாக செயற்படுத்துவதற்குரிய வழிமுறையைச் சமர்ப்பித்து அனுமதி பெற்று, கிளைச் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் . இது குறித்து ஆக்கபூர்வமான கிளைச் செயற்பாடுகள் 2019.07.01 ஆம் திகதியிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

பொ.வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாண சபை.

பிரதி - செயலாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு — வடக்கு மாகாணம்.

"සිංහල භාෂා පරිවර්තනය"

**චක්‍රලේඛ අංකය:2019/01**

සමූපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව,
උතුරු පළාත් සභාව.
2019.05.27

සියළුම විවිධ සමූපකාර සමිති සභාපතිවරුන් වෙත,

## විවිධ සමූපකාර සමිතිවල ඌණ කාර්යක්ෂමතාවයෙන් යුත් ශාඛා ස්ථාන උපයෝජනයට භාජනය කිරීම.

උතුරු පළාතේ වූ විවිධ සමූපකාර සමිතිවල ඇතැම් ශාඛා ස්ථාන වැසූ තත්ත්වයේ පවතී. ඇතැම් ශාඛා ස්ථාන අඛණ්ඩව මෙහෙයවීමට නොහැකි තත්ත්වයේ / පාඩු තත්ත්වයේ පවත්වාගෙන යමින් පවතී. ශාඛාවන් තම ක්‍රියාදාමය නිසියාකාරව පවත්වාගෙන යාම පිණිස එහි හිමිකරුවන ශාඛාවේ කමිටු භාරව කටයුතු කළ යුතුය. එමනිසා ශාඛාවේ කමිටුවල සහාය ඇතිව මෙවැනි ශාඛාවන්, සම්පූර්ණ ශක්තිය යුතුව නැවත ක්‍රියාත්මකවීමට / උපයෝජනය කිරීමට සුදුසු සැළැස්මක අවශ්‍යතාවය පෙනී යයි. ඒ නිසා මේ සඳහා පිළියෙල කරන ලද ක්‍රමවේද හතරකින් යුත් සැළැස්මේ කෙටුම්පත පහතින් වේ.

### 01. ශාඛාවේ කමිටු සාමාජිකයින් ශාඛා ස්ථාන පවත්වාගෙන යාම:

ශාඛාවේ සාමාජිකයින් තම ස්වකීය ආයෝජන මගින් ශාඛාව මෙහෙයවන ක්‍රමවේදයකි මෙය. ආයෝජනයේ ප්‍රමාණය, කොටස් වටිනාකම් පදනමින් කොටස් පැකේජය තීරණය කල හැකිය. ශාඛාවේ කමිටුව නියමිත ශාඛා ස්ථානය පවත්වාගෙන යාමට අවශ්‍ය වන්නා වූ ආයෝජන මුදල තීරණය කර, අවම වශයෙන් එක් කොටසක පැකේජයකට හෝ ආයෝජනය කළ යුතු බවට සෑම ශාඛාවකම සාමාජිකයින් තුළ උනන්දුවක් ඇති කළ යුතුය.

ශාඛාවේ කළමනාකරණය පිළිබඳ විස්තර පහත වේ.

i. ස්ථානය අධීක්ෂණය කිරීම හා ගිණුම් තැබීම - ශාඛාවේ කමිටුව පත්කරන සාමාජිකයෙකු විසින් අධීක්ෂණය සිදු කළ හැකිය. ඒ සමග ගිණුම් තැබීම ශාඛාවේ කළමනාකරු විසින් සිදු කළ යුතුය.

ii. භාණ්ඩ මිළ දී ගැනීම - විකිණීමට අත්‍යවශ්‍ය වන්නා වූ භාණ්ඩ, මූලස්ථාන සමිතියේ තොග අලෙවි ස්ථානයේ විකුණුම් මිළට ලබාගත හැකිය.

iii. ගිණුම් පරීක්ෂා කිරීම - ප්‍රධාන කාර්යාලයේ අභ්‍යන්තර විගණක/ගණකාධිකාරී/ගිණුම් තබන්නා, ශාඛා කමිටුවේ අදාළ ගිණුම් කාර්තුමය වශයෙන් පරීක්ෂා කරනු ලැබ, ලබාදිය යුතුය.

iv. කාර්ය මණ්ඩලය - සමිතියේ තනතුර තීරණය කළ සේවකයින් සිටී නම්, ඔවුන්ව උපයෝගී කළ හැකිය. එලෙසින්වන සේවකයින් නොමැති විටෙක, සමූපකාර සේවක කොමිෂන් සභාවෙහි අනුමැතිය සමග ශාඛාවේ කමිටුව තාවකාලිකව කාර්ය මණ්ඩලයක් පත් කළ හැකිය. සේවකයින්ගේ වැටුප්, සුදුසු ආකාරයකින් ශාඛාවේ කමිටුව විසින් ගෙවිය යුතුය.

**04. වෙනත් අවශ්‍යතා සඳහා විවෘත මිල ගණන් කැඳවීම මගින් සෙසු තැනැත්තන්ට කුලියට දීම:**

පරිහරණයෙන් තොරව පවතින ශාඛාවේ ගොඩනැගිල්ල විවෘත මිල ගණන් කැඳවීම මගින් එම ප්‍රදේශයේ වූ රාජ්‍ය ආයතනවලට හෝ සෙසු තැනැත්තන්ට හෝ නියමිත ගිවිසුමකින් ශාඛාවේ මහා සභාව තීරණය කරනු ලබන මාසික කුලියට ලබාදිය හැකිය. ලැබෙන මාසික කුලී මුදල ශාඛාවේ සංවර්ධන සංචිතය වශයෙන් තැන්පත් කළ යුතුය.

ඉහත කී ක්‍රමවේද සතර එහි ප්‍රමුඛතා අනුපිළිවෙළින් (1,2,3,4) සාකච්ඡාවට ලක් කර, ශාඛාවේ මහා සභාවේ තීරණය සමග සමිතියේ කාරක සභාව වෙත ඉදිරිපත් කර, තීරණ ගෙන, මහා සභාව විසින් මෙම චක්‍රලේඛයට අනුකූලව අක්‍රියව පවතින ශාඛාවන් ක්‍රියාත්විතවීමට / අඛණ්ඩව පාඩුවේ ක්‍රියාත්මකවන ශාඛාවන් ලාභයෙන් යුතුව පවත්වාගෙන යාමට අදාළවන ක්‍රමවේද ඉදිරිපත් කර අනුමැතිය ලබා, ශාඛාවල ක්‍රියාදාමයේ වෙනසක් ඇති කළ යුතුය. මේ සම්බන්ධයෙන් ඵලදායී ශාඛා ක්‍රියාදාම 2019.07.01 වැනි දින සිට අපේක්ෂා කරනු ලැබේ.

පී.වාගීසන්,
සමුපකාර සංවර්ධන කොමසාරිස් හා
සමුපකාර සමිති රෙජිස්ට්‍රාර්,
උතුරු පළාත් සභාව.

පිටපත:- ලේකම්, සමුපකාර සේවක කොමිෂන් සභාව, උතුරු පළාත.

**04. වෙනත් අවශ්‍යතා සඳහා විවෘත මිල ගණන් කැඳවීම මගින් සෙසු තැනැත්තන්ට කුලියට දීම:**

පරිහරණයෙන් තොරව පවතින ශාඛාවේ ගොඩනැගිල්ල විවෘත මිල ගණන් කැඳවීම මගින් එම ප්‍රදේශයේ වූ රාජ්‍ය ආයතනවලට හෝ සෙසු තැනැත්තන්ට හෝ නියමිත ගිවිසුමකින් ශාඛාවේ මහා සභාව තීරණය කරනු ලබන මාසික කුලියට ලබාදිය හැකිය. ලැබෙන මාසික කුලී මුදල ශාඛාවේ සංවර්ධන සංචිතය වශයෙන් තැන්පත් කළ යුතුය.

ඉහත කී ක්‍රමවේද සතර එහි ප්‍රමුඛතා අනුපිළිවෙලින් (1,2,3,4) සාකච්ඡාවට ලක් කර, ශාඛාවේ මහා සභාවේ තීරණය සමග සමිතියේ කාරක සභාව වෙත ඉදිරිපත් කර, තීරණ ගෙන, මහා සභාව විසින් මෙම චක්‍රලේඛයට අනුකූලව අක්‍රියව පවතින ශාඛාවන් ක්‍රියාත්විතවීමට / අඛණ්ඩව පාඩුවේ ක්‍රියාත්මකවන ශාඛාවන් ලාභයෙන් යුතුව පවත්වාගෙන යාමට අදාළවන ක්‍රමවේද ඉදිරිපත් කර අනුමැතිය ලබා, ශාඛාවල ක්‍රියාදාමයේ වෙනසක් ඇති කළ යුතුය. මේ සම්බන්ධයෙන් ඵලදායී ශාඛා ක්‍රියාදාම 2019.07.01 වැනි දින සිට අපේක්ෂා කරනු ලැබේ.

පී.වාගීසන්,
සමුපකාර සංවර්ධන කොමසාරිස් හා
සමුපකාර සමිති රෙජිස්ට්‍රාර්,
උතුරු පළාත් සභාව.

පිටපත:- ලේකම්, සමුපකාර සේවක කොමිෂන් සභාව, උතුරු පළාත.